# இயல் – II

## பொதுவான பரிந்துரைகள்

உள்ளாட்சி அமைப்புகள் திறமையாக செயல்படுவதற்கு அவசியமான அனைத்து அதிகாரங்களையும் பகிர்ந்தளிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகிறது. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான கூடுதல் அதிகாரங்களை ஆராய்ந்து பரிந்துரைக்க நியமிக்கப்பட்ட இந்த உயர்மட்டக் குழுவும் உள்ளாட்சி மன்றங்களுக்கு மேலும் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் போது வழங்கப்பட்டுள்ள நிர்வாக உரிமைகளும், அதிகாரங்களும் நிதி பகிர்மானத்திற்கு ஒன்றுக்கொன்று முரண்படாத வகையில் கவனமாக பரிசீலித்து (அ) மூன்றடுக்கு நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்த, பொதுவான நிர்வாக மற்றும் நிதி சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் மற்றும் (ஆ) 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பட்டியல்–IVல் கண்டுள்ள 29 பொருட்கள் சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் என்ற இரண்டு நிலைகளில் பரிந்துரைத்துள்ளது.

## மூன்றடுக்கு நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்த, பொதுவான நிர்வாக மற்றும் நிதி சம்பந்தப்பட்ட பரிந்துரைகள்.

### I. நிர்வாக அமைப்பு சம்பந்தமான பரிந்துரைகள்

#### அ. கிராம சபை

1. கிராம சபை அரசியல் அமைப்பு சாசன அடிப்படையில் அமைக்கப்பட்ட மக்களாட்சியின் அடித்தள அமைப்பாகும். கிராமசபை வலுவோட செயல்படத் தக்கவகையில் சட்ட விதிகள் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கிராம வளர்ச்சிக்கு உரிய திட்டங்களை வகுத்தல், அவற்றை செயல்படுத்துதல், போன்ற பணிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிரமசபை வழிகாட்டுவதோடு, பல்வேறு துறை வளர்ச்சி பணிகளின் செயல்பாட்டை கண்காணிக்கும் முக்கிய பொறுப்பும் கிராம சபையிடம உள்ளது. எனவே கிராம சபையின் பணியை வலுப்படுத்துவதால் கிராம சபை மூலம் செயல்படுத்தப்படும் திட்ட பணிகளில் பொதுமக்களின் ஈடுபாடும், பங்கும் பெருக வாய்ப்புள்ளது. இந்த கிராமசபை அமைப்பே காலப்போக்கில் வளர்ச்சி பணிகளை சமூக தணிக்கை செய்ய

வழிவகை செய்யும். கிராம ஊராட்சிகளில் ஆண்டுக்கு குறைந்தது நான்கு முறையாவது அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராமசபை கூட்டம் நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது. எனவே கிராம சபை அடிக்கடி கூட்டவும், இந்த அமைப்பு வலிமையோடு செயல்படவும், அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

## ஆ. கிராம ஊராட்சிகள்

2. கிராம ஊராட்சிகளில் கூடுதலாக ஏற்பட்டுள்ள பொறுப்புகளையும், கடமைகளையும் கருத்தில் கொண்டு ஊராட்சிகளின் வருமானம் மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் பெரிய மற்றும் இதர ஊராட்சிகளை வகைப்படுத்தவும் முதல் கட்டமாக வசதி உள்ள பெரிய ஊராட்சிகள் அவசியமென கருதினால் அரசு நிர்ணயித்துள்ள தகுதிக்கேற்ப பகுதி நேர எழுத்தர்/ மக்கள் நலப் பணியாளரை முழு நேர பணியாளராக நியமிக்கவும் இருவருக்கும் கல்வித் தகுதி இருப்பின் பணி மூப்பு அடிப்படையில் நியமிக்கும் தகுதியான நபர்கள் இல்லாதபோது அரசாணைக்குட்பட்டு புதிய நபரை நியமித்து கொள்ளவும் குழு பரிந்துரைக்கிறது.

3. வருவாய் துறையில் கிராம பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று அகவிலைப்படி, ஊராட்சி பகுதி நேர எழுத்தர்களுக்கும் வழங்க ஆவன செய்யவேண்டும்.

4. கிராம ஊராட்சிகளின் இன்றைய சூழ்நிலையில் அதிகமான பணிகள் உள்ளன. ஆனால் பஞ்சாயத்துகளுக்கு போதிய நிர்வாக அலுவலர்கள் கிடையாது. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள இளநிலை பொறியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், குடிநீர், பராமரிப்பு அலுவலர், போன்ற ஒரு சில பணியாளர்களை பஞ்சாயத்துகளுக்கு நியமிக்கலாம்.

5. ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்குச் சேர்த்து ஒரே லைன்மேன் இருப்பதால், மின்சாரப் பழுதுகளைச் சரிசெய்ய காலதாமதமாவதைத் தவிர்க்க ஊராட்சி ஊழியர்களுக்கு பயிற்சியளித்து சிறிய பழுதுகளைச் சரிபார்க்க உரிமம் வழங்கி ஆவன செய்ய தமிழ்நாடு மின்வாரியத்தோடு தக்கதொரு ஏற்பாட்டை உருவாக்க வேண்டும்.

6. மக்கள் நல பணியாளர்கள் ஊராட்சி மன்ற கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அவர்களை நிர்வகிக்கும் பொறுப்பு ஊராட்சி நிர்வாக அலுவலருக்கு இருக்க வேண்டும்.

7. (அ) வரி அமைப்பு, நிதி, கணக்குகள் மற்றும் திட்டமிடுதல், (ஆ)கல்வி மற்றும் சுகாதாரம் (இ) நலத் திட்டங்கள் மற்றும் பொது விநியோக முறை ஆகிய பொருட்களில் நிலைக்குழு அமைக்கும் உரிமையை கிராம ஊராட்சிக்கே வழங்கப்பட வேண்டும். 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 96ன்படி ஊராட்சிகளுக்கு 4 குழுக்கள் அமைக்கும் அதிகரஙகளைத் தவிர வீடு கட்டுதல் மற்றும் இதர கட்டுமானப்பணிகள், சாலைப்பணிகள், குடிநீர் வழங்கல் மற்றும் பொதுப்பணிகள் , நிதி , வரிகள், போன்றவற்றிக்கு பணிக்குழுக்கள் அமைக்கும் உரிமையையும், நிதி ஆதாரங்ளை பெருக்குவது, மான்யங்களை வெளியிடுதல் மற்றும் பயன்படுத்துதல் போன்றவைகளுக்கு திட்டக் குழு அமைக்கும் உரிமையையும், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடிகள் நலத்திற்காகவும், வறுமை ஒழிப்புத் திட்டம், ஊரக வளர்ச்சி, பொது விநியோகத் திட்டம், குடும்ப நலம் மற்றும் சுகாதாரம் போன்றவைகளுக்கு நலக்குழு அமைக்கும் உரிமையையும் வழங்கப்பட வேண்டும்.

8. கிராம ஊராட்சிகளில் குடிநீர், மின்பம்பு சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு ஒன்றிய பொறியாளரைக் கொண்டு திட்ட மதிப்பு செய்து, முடித்த வேலைகளை அளப்பது, சான்று அளிப்பது போன்றவை செய்ய அதிகாரம் வழங்குவதுடன் கிராம ஊராட்சி தலைவர்கள் இது சம்மந்தமாக கடிதம் கொடுத்தால் கூடிய விரைவில் பார்வை இடவும், பார்வை இட மறுக்கும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு மட்டத்தில் நெறிமுறைகள் வெளியிடுதல் வேண்டும்.

9. ஊராட்சியில் வீடுகளுக்கு தண்ணீர் குழாய் இணைப்பு கொடுக்க ஊராட்சிக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். வீட்டு இணைப்புகளுக்கு திரும்ப செலுத்த தேவையில்லாத ஒரு தவணையிலான இணைப்பு தொகையும் கனிசமான மாதாந்திர தண்ணீர் தீர்வையும் வீட்டு இணைப்பு இல்லாதவர்களுக்கு மாதம் ரூபாய் 10க்கு குறையாமல் தண்ணீர் தீர்வை விதிக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.

10. குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் (Hut Service) கீழ் ஒரு பல்புக்கு மேல் பயன்படுத்தினால் அது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலருக்கு புகார் செய்ய ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

11. கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அதிகாரம் ஏற்கனவே ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஊராட்சி மன்ற தலைவர்கள் காவல் துறையினரின் உதவியை நாடினால் காவல் துறை மற்றும் வருவாய் துறை இதற்கு உதவியாக செயல்பட வேண்டும்.

12. கிராம ஊராட்சிகளுக்கு நூலகம், பொதுமக்கள் கூடும் இடம், பள்ளிக்கூடம், விலங்குகள் நல்வாழ்வு கூடம் கட்டுவதற்கு அரசு இடத்தை எடுத்துக் கொள்ள முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதற்காக வருவாய் துறையை சார்ந்த பி மெமோ, டி மெமோ 2சி பட்டா மற்றும் மரம் சம்பந்தமான இதர தாக்கீதுகள் வழங்குவதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் ஆலோசனை பெற வேண்டும்.

13. இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் போது ஊராட்சித் தலைவர்களை கலந்தாலோசனை செய்வதுடன் சொந்த வீடு இல்லை என்று உறுதிபடுத்திய பிறகுதான் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும்.

14. தொழில் வரி சட்டவிதிகளின்படி மத்திய அரசு அலுவலர்கள் உள்பட அனைத்துப் பொருளீட்டும் நபர்கள் மீதும் விடுதல் இன்றி வசூலிக்க வழிவகை செய்ய வேண்டும்.

15. கணிமம் மீதான சன்மானவரி (Royalty) கிராம ஊராட்சிகளுக்கு ஒரு பகுதியை அரசு பிரித்து தர குழு பரிந்துரைக்கிறது.

16. நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ளது போல் குடிநீர் மற்றும் வடிகால் வரி விதிப்பதுபோல் ஊராட்சிகளிலும் வீட்டு வரி தொகை மீது 20%க்கு மிகாமல் குடிநீர் வரி விதிக்க பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் வழங்க குழு பரிந் துரைக்கிறது. அரசு ஆவண செய்ய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரைக்கிறது.

17. நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ளதுபோல் கிராம புறங்களில் விளம்பர வரி விதிக்க ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கவும் அதற்குரிய சட்ட திருத்தங்களை அரசு கொண்டுவரவும் இக்குழு பரிந்துரைக்கிறது.

18. மின்சார வாரியம் விளக்குகள் அமைக்கும்போது ஊராட்சி சொத்துக்களில் கம்பங்கள் நட ஊராட்சியின் முன்அனுமதி பெறுவதில்லை. ஆனால் பிற்காலத்தில் சாலைகள் அகலப்படுத்துதல் போன்ற வளர்ச்சி பணிகளுக்கு கூட கம்பங்கள் மாற்ற மின்சார வாரியம் தீர்வை விதிக்கிறது. இதுபோன்ற வளர்ச்சி பணிகளை முன்னிட்டு கம்பங்கள் மாற்ற நேரிட்டால் இதுபோன்ற தீர்வை விதிக்காமல் வாரியம் மாற்றித்தர உரிய ஆணை பிறப்பிக்க அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

19. வீடுகளுக்கு மின் இணைப்பு தர மின்சாரவாரியம் கிராம நிர்வாக அதிகாரியின் சான்றிதழை வலியுறுத்துவதை தவிர்த்து ஊராட்சியின் சான்றிதழ் அடிப்படையில் மின்இணைப்பு தர உரிய அரசு ஆணை வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

20. அபயாகரமான தொழில் மீதான உரிம கட்டணம் வசூலிக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மாற்றி ஊராட்சிகளுக்கு வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

21. ஊராட்சி ஒன்றியங்களிலும் மாவட்ட ஊராட்சியுலும் பல்வேறு குழுக்கள், அமைத்து செயல்பட உரிய வழிவகை ஏற்படுத்தப்பட்டு உள்ளது, ஆனால் பல்வேறு பணிகளை செய்துவரும் ஊராட்சிகளில் இதுபோன்ற குழுக்கள் அமைக்க விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை, எனவே குடிநீர், சுகாதாரம், சம்பந்தமான குழு, உணவு மற்றும் பொதுவிநியோகம் சம்பந்தமான குழு, திட்டப்பணிகள் சம்பந்தமான குழு போன்று ஐந்து குழுக்களுக்கு மிகாமல் ஊராட்சிகள் அமைத்து செயல்பட விதிகள் ஏற்படுத்த குழு பரிந்துரை செய்கிறது.

**இ . ஊராட்சி ஒன்றியங்கள்**

22. களப்பணியில் ஏற்கனவே 10 ஊர்நல அலுவலர்கள் இருந்தார்கள். அவர்களை ஊராட்சிகளிலிருந்து எடுத்து ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலகத்தில்

பணிபுரிய அரசு ஏற்கனவே உத்திரவிட்டு நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஊராட்சி அளவிலான நிர்வாகம், அடிப்படை புள்ளி விவரங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் முழுமையாக சேகரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்ப இயலவில்லை. எனவே இவர்களை மீள களப்பணிக்கே திரும்ப அனுப்ப உத்தரவிட வேண்டும்.

23. சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் எல்லைவரை அடங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் வேலைகளுக்கு சிட்டி ரேட் முறையை அமுல்படுத்தி மதிப்பீடு தயார் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

24. அரசு விழாக்களுக்கு தற்போது ஒன்றியங்களின் செலவுத் தொகையாக அனுமதிக்கப்படும் தொகை ரூ.1000/க்குப் பதிலாக ரூ.2000/ஆக அனுமதிக்கப்பட வேண்டும்.

25. அவசரம் அவசியம் கருதி ஒன்றியத்தில் ஏற்படுகின்ற பணிகளை உடனடியாக ஏற்றுச் செய்வதற்கு பொதுப்பணித் துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் போல் ரூ.50 ஆயிரம் வரை நியமனதாரர் (offer) மூலமாகவும் வேலை செய்ய ஒன்றிய குழுவிற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

26. ஊராட்சி ஒன்றியத்தில் வரும் சத்துணவு, மதிய உணவு அமைப்பாளர்கள், சமையல் உதவியாளர்கள், ஆகியோர்களது நியமனத்தை ஒன்றியத்திலுள்ள பணி நியமனக்குழுவிற்கு (appointment Committe) தேர்வு செய்யும் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும்.

### ஈ. மாவட்ட ஊராட்சி.

27. மாவட்ட ஊராட்சிக்கு என்று தனியாக முழு நேர செயலரை நியமனம் செய்யவும், இதனால் மாவட்ட ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதியை பயன்படுத்தி திட்டங்கள் செயல்படுத்தும் முழு அதிகாரமும் மாவட்ட ஊராட்சிக்கு அளித்திட வேண்டும்.

28. மாவட்ட ஊராட்சி மன்றங்களுக்கு நிதியை அரசு அளித்து வருகிறது. ஆனால் அவர்களுக்கு நிர்வாக ஊழியர்களோ அல்லது அலுவலர்களோ அதை நிர்வகித்து கண்காணிக்கின்ற பொறுப்புகளோ இல்லை. ஆகவே மாவட்ட ஊராட்சி மன்றத்திற்கு தேவையான அலுவலர்களையும் மற்றும் பணிகளை நிறைவேற்றும் அதிகாரங்களையும் ஒப்படைக்கலாம்.

29. மாவட்ட ஊராட்சிகளுக்கு 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், விதி 97ன்படி ஐந்து நிலைக் குழுக்கள் அமைக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அந்த 5 நிலைக் குழுவிற்கு எந்தவகையான பணிகள், அந்தக் குழுக்களின் அதிகாரம் என்ன?, என்பது வரையறுக்கப்படாததால் இது நாள்வரை அந்தக் குழுக்கள் அமைக்கப்படவில்லை. ஆகவே அந்தக் குழுக்களை அமைக்கவும் அதற்காக பணிகளை தெளிவு படுத்தவும் விதிமுறை வகுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

30. மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கு வாகன எரிபொருளாக டீசல் 125 லிட்டர் அல்லது பெட்ரோல் 195 லிட்டர் என வழங்கப்படுகிறது. இதில் தொகை வித்தியாசம் காணப்படுகிறது. மேலும் குறைந்த ஊராட்சிகளைக் கொண்ட மாவட்ட ஊராட்சிகளுக்கும், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை போன்ற அதிக ஊராட்சிகளைக் கொண்ட மாவட்டங்களுக்கும் ஒரே அளவாக எரிபொருள் வழங்கப்படுகிறது. இதனை ஊராட்சிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உயர்த்தி வழங்க வேண்டும்

31. மாவட்ட கொள்முதல் குழுவில் மாவட்ட ஊராட்சி தலைவரை குழுவின் ஓர் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

32. அனைத்து மாவட்ட ஊராட்சி தலைவர்களின் கூட்டம் வருடத்திற்கு ஒரு முறை முதலமைச்சர்/ உள்ளாட்சித்துறை அமைச்சர் ஆகியோரால் கூட்டப்பட்டு, பணிகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்திட வேண்டும்.

## உ. மாவட்ட திட்டக்குழு

33. மாவட்ட திட்டக்குழுவை நிறுவ அரசு விதிமுறைகளில் வழிவகைகள் செய்துள்ளபோதிலும், தற்போதைய விதிமுறைபடி மாவட்ட திட்டக்குழு

நடைமுறைபடுத்த முடியாத அளவுக்கு 100க்கு மேற்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கி உள்ளதால் இதை நடைமுறை படுத்த கூடிய வகையில் உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறைக்க உரிய சட்ட திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். மேலும் மாவட்ட திட்டக் குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சி தலைவரை நியமிக்க வேண்டுமென மூன்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தாலும் பெரும்பாலான உறுப்பினர்கள் கருத்துப்படி தற்போதுள்ளபடி மாவட்ட ஆட்சியரே தலைவராக தொடர்வது நல்லது என்றும் மாவட்ட ஊராட்சி தலைவர் மாவட்ட திட்டக்குழுவின் உப தலைவராக நியமிக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது. இது போன்ற மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கும் மாவட்ட ஊராட்சி தலைவரை மாவட்ட ஆட்சியருக்கு பதில் முகமையின் தலைவராக நியமிக்க மூன்று உறுப்பினர்கள் (திரு.ஜி,இராமகிருஷ்ணன், திரு.ஏ.எம்.கோபு மற்றும் திரு.கே.எஸ்.அழகிரி) மட்டும் கருத்து தெரிவித்ததாலும் பெரும்பாலானஉறுப்பினர்கள் முடிவுப்படி தற்போதைய நிலையே தொடர குழு பரிந்துரைக்கிறது.

34. இந்திய அரசியலமைப்பு சட்டம் மற்றும் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் நகர்புற ஊராட்சிகள் உரிய வருடாந்திர சமூக பொருளாதார வளர்ச்சி திட்டங்களை தீட்டி மாவட்ட திட்ட குழுவில் ஒருங்கிணைத்து மாநில திட்ட குழுவிற்கு சமர்பிக்க உரிய வழிகாட்டி நெறிமுறைகள் இதுவரை வெளியிடப்படவில்லை. எனவே இந்த வழிகாட்டி நெறிமுறைகளை கூடிய விரைவில் அரசின் திட்ட துறையும், மாநில திட்ட குழுவும் வெளியிட அரசு வழிவகை செய்ய வேண்டும். வருங்காலத்தில் மாநில ஆண்டு திட்டத்தில் மாவட்டம் வாரியாக ஒவ்வொரு துறை சம்பந்தமான திட்ட மதிப்பீடு தனித்தனியாக குறிப்பிட்டு காட்டப்பட வேண்டும்.

35. மத்தியில் உள்ள தேசிய வளர்ச்சி குழுமம் போன்று, மாநில அளவில், முதலமைச்சரை தலைவராகக் கொண்டும், சில சட்டமன்ற உறுப்பினர்கள், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள், மாநகரத் தந்தைகள், அமைச்சர்கள், முதுநிலை நிர்வாகத்தினர்கள், மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர்களையும் கொண்டு, மாநில வளர்ச்சி குழுமம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

36. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம், ஊரக பகுதிகளிலும் நகர்ப்புற பகுதிகளிலும் நிறைவேற்றப்படுவதால் இத்திட்ட பணிகளை அனுமதித்து அதன் செயல்பாட்டை கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட திட்ட குழுவிற்கே வழங்க வேண்டும்.

37. குழு நிதி பகிர்ந்தளிப்பது பற்றி விவாதிக்கும்போது உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக அதிகாரங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டுமென கருதுகிறது. திரு. கே.எஸ். அழகிரி கருத்து தெரிவிக்கையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 257 (பட்டியல் 4ல்) கூறப்பட்டுள்ள 29 துறைகளை, உள்ளாட்சி அமைப்புகள் ஆய்வு செய்தல், உதவுதல், கண்டறிதல் என்று மட்டுமே தற்போது கூறப்பட்டுள்ளது. இதனால் 'அதிகாரம் வழங்கியதாக' பொருள் கொள்ள முடியாது என்றும், மாறாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் 243 (ஜி)யில் கூறப்பட்டுள்ளது போல் செயற்படுத்துதல் அல்லது நிர்வகிக்கும் பொறுப்பினை மாநில அரசு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும் என தெரிவித்தார். மேலும் சில உறுப்பினர்கள் (திரு.கே.எஸ்.அழகிரி, திரு.ஜி.இராமகிருஷ்ணன், திரு.ஏ.எம்.கோபு) மாநில அரசு அதன் மொத்த நிதியில் 29 முதல் 33 விழுக்காடு பகிர்ந்தளிக்க வேண்டுமென கருத்து தெரிவித்தனர். தற்போது கல்வி, சுகாதாரம், கால்நடை, விவசாயம், உள்ளாட்சி பணியாளர் செலவினம் என பெரும்பகுதி செலவிணத்தை அரசே நேரடியாக ஏற்றுக் கொண்டாலும் மொத்த மாநில வருவாயில் 8% க்கு மேல் உள்ளாட்சிகளுக்கும் பகிர்ந்தளிப்பது நல்ல முறை என்று குழு கருதுகிறது. எனினும் இதுபோன்ற நிதி பகிர்மானம் பற்றிய பரிந்துரை மாநில நிதி குழுவின் அதிகார வரம்பிற்குட்பட்டது என்பதை கருத்தில் கொண்டு இதை அடுத்த மாநில நிதி குழு ஆய்ந்து பரிசீலிக்க வேண்டுமென இக்குழு கருதுகிறது.

## ஊ. இதர பரிந்துரைகள்

38. தேர்தலைப் பொறுத்தவரை, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்,மாவட்ட ஊராட்சி தலைவர் ஆகியோர்களுக்கு நேரடி தேர்தல் நடத்தப்படவேண்டும். மேற்படி தேர்தலில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி தலைவர் ஒன்றிய உறுப்பினராகவும், ஒன்றிய பெருந்தலைவர் மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும் செயல்பட வேண்டும். எந்த முறையில் தேர்தல் நடத்தவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் உரிமை மாநில அரசுக்கு வழங்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

39. மூன்றடுக்கு ஊராட்சி நடைமுறை, ஒன்றுக்கொன்று தொடர்பு அற்றதாக உள்ளது. இது சிறப்பாக செயல்படவில்லை. எனவே அரசு சட்ட திருத்தத்தின் மூலம் மூன்றடுக்கு ஊராட்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக ஆக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து மூன்றடுக்கு ஊராட்சி தொடர்புடைய அமைப்புகளாக செயல்பட ஆவன செய்யப்பட வேண்டும். உண்மையான அடிமட்ட தேவைகளை அதற்கடுத்த அருகில் உள்ள தலைமைக்கு பிரதிநிதிகள் மூலம் எடுத்துக் கூறப்பட்டு தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். எனவே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மாவட்ட ஊராட்சியின் உறுப்பினராகவும், பணியாற்ற வாய்ப்பு ஏற்படும். மேலும் ஊராட்சி ஒன்றியத்தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆகியோர் பொது மக்கள் மூலமும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

40.நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் மறைமுகமாக உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களை உரிய வழிமுறைகளை பின்பற்றி நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்வது பொதுவாக நடைமுறையில் உள்ள விதிமுறை. இதுபோன்ற விதிமுறைகள் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் இருந்த போதிலும், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர்களை நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்பின் உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்ய வழிவகை இல்லை. குழுவில் ஒரு உறுப்பினர் (திரு.ஜி.இராமகிருஷ்ணன்) மட்டும் கட்சித் தாவல் சட்டம் கொண்டுவராமல் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தால் இது தவறான விதிமுறைக்கு வழிகோலும் என கருத்து தெரிவித்தார். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ல் உரிய சட்ட திருத்தங்கள் கொண்டு வந்து ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சி பெருந்தலைவரை நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்ய உரிய வழிவகை செய்ய வேண்டும் என குழு கருதுகிறது.

41. ஒன்றிய பொறியாளரின் மதிப்பீடு அதிகாரம் ரூபாய் 30,000/லிருந்து ரூபாய் 1,00,000/- ஆகவும், கோட்டப் பொறியாளரின் மதிப்பீடு அதிகாரம் ரூபாய் 5 லட்சத்தில் இருந்து ரூபாய் 10 லட்சமாகவும் ஆகவும் உயாத்தப்பட வேண்டும்.

42.உள்ளாட்சி செயல்பாடுகளுக்கு எளிமையான, மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய சட்டதிட்டங்களை உருவாக்கிடவேண்டும். அது தமிழ் மொழியில் இருப்பது மிகவும் அவசியம்.

43. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பான செயல் விளக்கங்கள், உரிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு எல்லா துறைகளிலிருந்தும் வழங்க வேண்டும்.

44.உள்ளாட்சி பற்றிய அரசு ஆணைகள் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வந்து சேருமாறு செய்திடல் வேண்டும். அரசு ஆணைகள் ஆண்டுதோறும் தொகுத்து புத்தக வடிவில் அச்சிட்டு வழங்கப்பட வேண்டும்.

45. உள்ளாட்சிக்கு உட்பட்ட புறம்போக்கு நிலங்கள் உரிய பயனில்லாது போனால் உள்ளாட்சிகளே தங்கள் தேவைக்கு பள்ளிகள், மருத்துவமனைகள், உபமின்நிலையங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு எடுத்துக்கொள்ள உரிய வழிவகை செய்ய வேண்டும்.

46. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் உடனடி தணிக்கை முறை மற்றும் தொடர் தணிக்கை முறை அறிமுகப்படுத்த வேண்டும்.

47. உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் கட்டுமானப் பணிகளை தணிக்கை செய்ய "தொழில் நுட்ப தணிக்கைக் குழு" அமைக்கப்படல் வேண்டும்.

48. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் அமுல்படுத்தப்பட்டபின் கணிசமான அளவு பெண்களும், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியின சமுதாயத்தினரும் முதல் முறையாக நிர்வாக பொறுப்பை ஏற்றுள்ளனர். இவர்கள் ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை முழுமையாக உணர்ந்து செயல்படுவதில் பல இடர்பாடுகள் உள்ளன. ஏனவே புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கு குறிப்பாக பெண்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடி

இன மக்கள் பிரதிநிதிகளுக்கு ஐந்து ஆண்டு காலத்தில் இரண்டு முறையாவது முறையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் ஒரு பயிற்சியும், இரண்டு ஆண்டுக்கு பிறகு கருத்து பரிமாற்றம் ஏற்படத்தக்க வகையில் ஒரு பயிற்சியும் அளிக்க வேண்டும்.

49.அதேபோல், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் நிர்வாக பொறுப்பு ஏற்றபின்பு மாறுபட்ட நிலையில் அடிமட்டத்திலிருந்து திட்டமிட்டு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளுவதில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கை உணறும் வகையிலும் அலுவலர்கள் இதற்கு உறுதுணையாக ஆற்ற வேண்டிய கடமை பற்றியும், மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படும் அலுவலர்களுக்கும் பிற துறை அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்க வேண்டும்.

50. இதுபோன்ற பயிற்சிக்கு அவசியமான கையேடுகள் தயாரித்து வழங்குவதுடன், பயிற்சி அளிக்கும் ஊரக வளர்ச்சி துறை பயிற்சி நிறுவனங்கள், தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் இதுபோன்ற பயிற்சி அளிப்பதற்குரிய கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

51. உள்ளாட்சி மன்றங்களில் முறைகேடுகள் மற்றும் ஊழலை தடுக்க மாநில அளவிலான அம்புட்ஸ்மான் குழு (Ombudsman Committee) அமைக்க வேண்டும். இக்குழுவில் நீதிபதி, அதிகாரிகள் மற்றும் பொறுப்பு வாய்ந்த வல்லுநர்கள் கொண்ட கண்காணிப்புக்குழு அமைத்து, இக்குழு உள்ளாட்சி நிர்வாகத்தில் முறைகேடு, ஊழல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். திரு.கே.எஸ்.அழகிரி அவர்கள் கருத்து தெரிவிக்கையில், ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் மேல் எடுக்கப்படும் பதவி நீக்கம் மற்றும் இதர நடவடிக்கைகளுக்கு முன் அவைகள் குறித்து அம்புட்ஸ்மான் குழுவின் கருத்துக்களைப் பெற்று அவர்கள் மீது மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

52. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் பேணப்படும் பதிவேடுகள், படிவங்கள், அறிக்கை முறை போன்றவைகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டு தொடர்ந்து பேணப்பட வேண்டும். இவ்வினங்களில், நிர்வாகத் தகவல் முறை சீரான முறையில் கையாளப்படல் வேண்டும்.

53. உள்ளாட்சி அமைப்புகளில் திட்டம் தீட்டும்போது வல்லுனர்களை முடிந்தவரையில் செலவில்லாமல் சேவையின் அடிப்படையில் பயனபடுத்த முனைய வேண்டும். முடியவில்லையெனில் ஒப்பந்தமுறையில் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

54. மாநில அளவில், தலைமைச் செயலரை தலைவராகக் கொண்டு, ஒரு அதிகார நிலைக்குழு ஏற்படுத்தப்பட வேண்டும். திட்டங்களில், செயல்பாடுகளில் துரிதமாகவும், நிறைவுடனும் செய்வதற்கு ஏதுவாக, தேவைப்படும்போது விளக்கங்களும், உரிய வழிமுறைகளும் தருவது இக்குழுவின் பணியாகும்.

55. குழு தன்னுடைய அறிக்கையை முழுமையாக சமர்ப்பித்து மாவட்ட ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், கிராம ஊராட்சிகளுக்கும் அதிகாரங்களை ஒவ்வொன்றாக கொடுத்த பின்பு அவைகளில் ஏற்படுகின்ற நடைமுறை சிக்கல்கள் ஏதாகிலும் இருந்தால் அந்த சிக்கல்களை தவிர்க்கவோ அல்லது அதற்கு வேறு வழிவகை காணவோ முயல வேண்டி இருக்கலாம். ஆகவே ஒரு கண்காணிப்பு குழுவை அமைத்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் செயல்படுகிறதா என்று கண்காணிப்பதற்கு நிரந்தரமாக ஒரு குழுவை அமைக்கலாம்.

## II. திட்டங்கள் நடைமுறை சம்பந்தமான பரிந்துரைகள்

56. திட்ட செயல்பாடு, அடிப்படை சேவைகள், வசதிகள் போன்றவற்றின் விவரம் உடனுக்கடன் பெற "கிராம நிர்வாக தகவல் முறை திட்டம்" எல்லா மாவட்டங்களிலும் கடைபிடிக்கப்பட வேண்டும். கிராமங்களில் நடைபெறும் திட்டங்கள், அவற்றின் மதிப்பீடு மற்றும் செயல்படுத்தும் நபர் போன்ற விவரங்கள் பற்றிய தகவல் பலகை அனைத்து ஊராட்சிகளிலும் வைக்கப்பட வேண்டும்.

57. உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரமும், நிதி ஆதாரமும் அளிப்பதோடு திட்டங்களை நிறைவேற்ற ஊழியர்களையும் அளிக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கும் திட்டங்களை நிறைவேற்றும் அரசு ஊழியர்களின் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படவேண்டும். படிப்படியாக அரசின் கீழ் இன்றுள்ள பல துறைகளும், துறைசார்ந்த ஊழியர்களும் உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் ஊராட்சிகள் செயல்பட ஆரம்பித்த பின்னர் அடிப்படைத் தேவைகளுக்குக்கான திட்டங்கள் தீட்டுவதை குறைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் பல அலுவலர்கள் உள்ளாட்சிக்கு உட்பட்ட செயல்படும் அலுவலர்களாக மாற்றப்படல் வேண்டும்

58. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் , வறட்சிப் பகுதி மேம்பாடு திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் இதர திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இவைகளை முறையாக பராமரிக்க சொத்தின் மொத்த மதிப்பீட்டில் குறிப்பிட்ட சதவீதத்தை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு பராமரிப்பு நிதியாக ஒதுக்கப்படல் வேண்டும். இதை பராமரிப்பதற்கான பொதுவான வழி நெறிமுறைகளை அரசு வெளியிட வேண்டும்.

59.பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒன்றுக்கு மேற்பட்டத் திட்டங்களை ஒருங்கிணைத்து அதிக பட்ச வளர்ச்சியை கொண்டுவர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதி வழங்கி, இதற்குரிய சட்டத் திட்டங்களும், வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசு வெளியிட வேண்டும்.

60. மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு நிர்வாகம், தொழில் நுட்பம் மற்றும் நிதி தொடர்பாக பரவலாக்கப்பட்ட முறையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் , பணிகள் விரைவாக முடிக்கும் பொருட்டு செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான செயல் வழிமுறைகள் எளிதான முறையில் தொகுக்கப்பட வேண்டும். மேலும் பணிகள் சம்பந்தப்பட்ட குழுவின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். கட்டுமானப் பணிகள் சம்பந்தப்பட்ட செயல்முறை கையேடு தொகுக்கப்படல் வேண்டும். இது திட்டமிடுதல், மதிப்பிடுதல், செயலாக்கம், மற்றும் கணிப்பாய்வு பணிகளுக்கு உதவும்.

61. உள்ளாட்சி அமைப்புகளுக்கு எழும் தொழில் நுட்ப ரீதியான சந்தேகங்களை தீர்ப்பதற்கும் மற்றும் தேவையான ஆலோசணைகள் வழங்கவும் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப துறைகளை பொறுப்பாக்க வேண்டும்.

62.உள்ளாட்சி மன்றங்களுக்கு உறுதுணையாக திட்டங்களைச் செயல் படுத்துவதிலும், அடிப்படை ஆதார வசதிகளான சாலைகள், குடிநீர் விநியோகம் ஆகியவற்றை பராமரிப்பதிலும் உறுதுணையாக இருக்கும் பொருட்டு சமுதாய அமைப்பில் தொடர்புடைய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பங்கு கொள்ளும் வகையில், இணை நிலைக்குழுக்கள் அமைத்து அவற்றையும் திட்ட செயலாக்கத்தில் பங்கேற்கச் செய்தல் வேண்டும்.உள்ளாட்சி அமைப்புகளில் கல்வி மற்றும் சுகாதார திட்டங்கள் செயல்படுத்துவதால், அந்தந்த அமைப்புகள் தேர்ந்தெடுக்கும் தன்னார்வக் குழுக்களின் உதவியை நாடலாம்.

63. ஆதிதிராவிடர் / மலை வாழ் மக்கள் மற்றும் பெண்கள் போன்ற நலிவுற்றோரின் மேம்பாட்டிற்கென உள்ளூர் வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த "ஒருமுகப்படுத்தப்பட்ட" வளர்ச்சி நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

64. மத்திய அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி வளர்ச்சி நிதியாக வருடத்திற்கு ரூபாய் 2 கோடி வழங்குகிறது. மாநில அரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ.35 லட்சம் வழங்குகிறது. அதே போல் மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கு தலா ரூ.20 லட்சமும், ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்களுக்கு தலா ரூ.15 லட்சமும், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு தலா ரூ.10 லட்சமும், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பனர்களுக்கு தலா ரூ.5 லட்சமும், கிராம ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு தலா ரூ.1 லட்சமும் தொகுதி வளர்ச்சி நிதியாக வழங்கலாம் என்று திரு.கே.எஸ்.அழகிரி அவர்கள் கேட்டுக் கொண்டார். எனினும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரக உள்கட்டமைப்பு வசதி போன்ற பல்வேறு திட்டங்கள் ஊராட்சி அமைப்புகள் மூலமே தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை தவிர மத்திய அரசின்உதவி பெறும் திட்டங்களை கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகிய அமைப்புகளே செயல்பபடுத்தி வருகிறது. இதன் அடிப்படையில் உறுப்பினரின் மேற்கண்ட கருத்து குறித்து அரசு தக்க முடிவெடுக்கலாம்.